S.பிச்சையா ஆச்சாரி சன்ஸ்-ன்
ஸ்ரீ முருகன்
ஜீவல்லரி மார்ட் A/C
HALL MARK
தங்கம் ★ வெள்ளி ★ வைரம்
9443081168 8438442557 9994638971
நகை சேமிப்பிற்கு செய்கூலி, சேதாரம் கிடையாது.
GOLD 916 | SIVER 92.5
Sri Murugan Jewellery Mart
உரிமையாளர்கள்
P.மணிகண்டன் B.Com., 78452 54592
P.பட்டு சங்கர் B.E., 99946 38971
41, மெயின் ரோடு, சங்கரன்கோவில்.
98945 71069

சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்
"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"

SPARES
2 WHEELER
SDK spare parts
HERO HONDA, TVS, BAJAJ, ROYAL ENFIELD, KTM, YAMAHA
ஒரிஜினல் ஸ்பேர்ஸ் கிடைக்கும்
No.3, மாஸ்டர் வீவர்ஸ் அசோசியேஷன் காம்ப்ளக்ஸ், சங்கரன்கோவில்
7540002331 / 9865147105

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 328 21.05.2026 THURSDAY VAIKASI : 7 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 328 21.05.2026 வியாழக்கிழமை வைகாசி : 7 விலை : ரூ.5/-

## பத்தாம் வகுப்பு முடிவுகள் வெளியீடு:

# "தமிழகத்தில் 94.31% பேர் தேர்ச்சி!"




சென்னை: மே.21-

தமிழகத்தில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் இன்று (மே 20) வெளியானது. தேர்வு எழுதிய மாணவர்களில் 94.31 சதவீதம் பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர் என பள்ளிக் கல்வித் துறை அறிவித்துள்ளது. தேர்வு முடிவுகளை பள்ளிக் கல்வி அமைச்சர் ராஜ்மோகன் வெளியிட்டார்.

தமிழக பள்ளிக் கல்வி பாடத் திட்டத்தில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு (மார்ச் 2026) கடந்த மார்ச் 11ம் தேதி தொடங்கி கடந்த ஏப்.6ம் தேதி நிறைவடைந்தது. சுமார் 8.82 லட்சம் மாணவர்கள் இந்த தேர்வை எழுதினர். தொடர்ந்து விடைத்தாள் திருத்த பணிகள் தொடங்கி நிறைவடைந்தது. இந்நிலையில், இன்று சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் தேர்வு முடிவுகளை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் வெளியிட்டார்.

மொத்தம் 8.82 லட்சம் மாணவர்கள் இந்த தேர்வை எழுதியதாக அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்தார். இதில் 94.31 சதவீதம் பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

வழக்கம்போலவே இந்த முறையும் தேர்ச்சி விகிதத்தில் மாணவர்களை காட்டிலும் மாணவிகளே முன்னிலை வகிக்கின்றனர். தேர்ச்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 92.15 சதவீதம், மாணவிகளின் எண்ணிக்கை 96.47 சதவீதம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் மாணவர்களை விட 4.32 சதவீதம் அதிகமாக மாணவிகள் தேர்ச்சி பெற்றிருக்கின்றனர்.

மாவட்ட அளவில் தேர்ச்சி விகிதத்தை பொறுத்தவரையில் புதுக்கோட்டை (97.57%), சிவகங்கை (97.54%), தஞ்சாவூர் (97.41%), திருச்சி (97.31%), கன்னியாகுமரி (97.30%) மாவட்டங்கள் முதல் 5 இடங்களை பிடித்துள்ளன.

அரசு பள்ளிகளின் ஒட்டுமொத்த தேர்ச்சி விகிதம் 91.66 சதவீதம் என பள்ளிக் கல்வித் துறை அறிவித்துள்ளது.

பாட வாரியாக தேர்ச்சி விகிதம்:

தமிழ் 98.43%, ஆங்கிலம் 99.44%, கணிதம் 97.36%, அறிவியல் 98%, சமூக அறிவியல் 97.93%.

நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெற்ற மாணவர்கள்:

தமிழ் 34 , ஆங்கிலம் 93, கணிதம் 3194, அறிவியல் 10476, சமூக அறிவியல் 3336 மாணவர்கள் நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெற்றுள்ளனர்.

## 15 ஐபிஎஸ் அதிகாரிகள் மாற்றம்: சிங்கப்பெண் அதிரடிப்படை ஐஜியாக பவானீஸ்வரி நியமனம்



சென்னை: மே.21-

15 ஐபிஎஸ் அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி, சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை ஐஜியாக பவானீஸ்வரி நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழகத்தில் முதல்வர் விஜய் தலைமையிலான புதிய அரசு பொறுப்பேற்றது முதல் ஐஏஎஸ், ஐபிஎஸ் அதிகாரிகள் தொடர்ந்து இடமாற்றம் செய்யப்பட்டு வருகின்றனர். அந்த வகையில், இன்று 15 ஐபிஎஸ் அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. அதன் விவரம்:

› குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்பிரிவு டிஜிபியாக வெங்கடராமன் நியமிக்கப்பட்டுள்ளார்.

› சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை ஐஜியாக பவானீஸ்வரி நியமிக்கப்பட்டுள்ளார்.

› காத்திருப்பு பட்டியலில் இருந்த அவினாஷ் குமார் இப்போது காவல் தலைமையக ஐஜியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

› வடக்கு மண்டல ஐஜியாக பிரவீன் குமார் அபினபு நியமிக்கப்பட்டுள்ளார்.

› சரவணா சுந்தர் ஐபிஎஸ் தற்போது சென்னை குற்றப் பிரிவு ஐஜியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

› காத்திருப்போர் பட்டியலில் இருந்த மகேஷ் இப்போது வேலூர் சரக டிஐஜியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

› தென் சென்னை சட்டம் ஒழுங்கு டிஐஜி, இணை கமிஷனர் ஆக விஜயகுமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

› புதுக்கோட்டை எஸ்.பி அபிஷேக் குப்தா இப்போது தூத்துக்குடி எஸ்பியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

› நீலகிரி எஸ்பி ஆக பிருந்தா நியமிக்கப்பட்டுள்ளார்.

› சைபர் கிரைம் பிரிவு எஸ்பியாக இருந்த ஷானாஸ் இப்போது கள்ளக்குறிச்சி மாவட்ட எஸ்பியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

› கள்ளக்குறிச்சி எஸ்பியாக இருந்த அரவிந்த் இப்போது காஞ்சிபுரம் மாவட்ட எஸ்பியாக மாற்றப்பட்டுள்ளார்.

› தாம்பரம் காவல் ஆணையரக சட்டம் ஒழுங்கு துணை ஆணையராக இருந்த பவன்குமார் ரெட்டி இப்போது கோயம்புத்தூர் மாவட்ட எஸ்பியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

› கோயம்புத்தூர் மாவட்ட எஸ்பியாக இருந்த கார்த்திகேயன் இப்போது தாம்பரம் காவல் ஆணையரக சட்டம் ஒழுங்கு துணை ஆணையராக மாற்றப்பட்டுள்ளார்.

› திருவண்ணாமலை உதவி காவல் கண்காணிப்பாளராக இருந்த சதீஷ்குமார் இப்போது பதவி உயர்வு பெற்று திருவாரூர் மாவட்ட எஸ்பியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

› விழுப்புரம் உதவி காவல் கண்காணிப்பாளராக இருந்த ரவிந்திர குமார் குப்தா இப்போது பதவி உயர்வு பெற்று புதுக்கோட்டை மாவட்ட எஸ்பியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## மருத்துவத்துறைக்கான புதிய வாகனங்கள் வழங்கும் விழாவில் கார் ஓட்டிய முதல்அமைச்சர் விஜய்



சென்னை, மே.21-

சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்அமைச்சர் விஜய் நேற்று 2.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்ககத்தின் பயன்பாட்டிற்காக 40 புதிய வாகனங்களை வழங்கிடும் வகையில், அவ்வாகனங்களுக்கான சாவிகளை ஒட்டுநர்களுக்கு வழங்கி, வாகனத்தை இயக்கித் தொடங்கி வைத்தார்.

மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்ககம், மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளிலுள்ள ஸ்கேன் மையங்களில் கருவுறுதலுக்கு முன், கருவுறுதலுக்கு பின் பாலின தேர்வு தடைச்சட்டம் 1994ன்படியும் மற்றும் தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் முறைப்படுத்துதல் சட்டம் 1997ன்படியும் சட்ட விதிகள் பின்பற்றப்படுகிறதா என்பதைக் கண்காணிக்கவும், முறையாக பதிவு பெறப்பட்டு இயக்கப்படுகிறதா என்பதை ஆய்வு மேற்கொள்ளவும்,

பேரிடர் மற்றும் பெருந்தொற்றுக் காலங்களில் மக்களுக்குத் தேவையான மருத்துவப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளவும், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் மக்களுக்கு தேவையான உரிய சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகிறதா என்பதைக் கண்காணிக்கவும், போலி மருத்துவர் மீது விரைந்து விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கவும் இப்புதிய வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.



## சென்னை அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில் அமைச்சர் ராஜ்மோகன் ஆய்வு

சென்னை, மே.21-

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;

சென்னை, கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் ராஜ்மோகன் அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில் உள்ள கலையரங்கம், கூட்டரங்கம், கருத்தரங்கம் மற்றும் செந்தமிழ் சிற்பிகள் அரங்கம் ஆகியவற்றை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் நூலக வாசகர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள குடிநீர், கழிப்பிட வசதிகள் குறித்தும் கேட்டறிந்தார். தொடர்ந்து, வளாகத்தில் உள்ள ஆவின் பாலகத்தில் பால் அருந்தி தரத்தினை ஆய்வு செய்து வாசகர்களுடன் கலந்துரையாடினார்.

உடன் பள்ளிக்கல்வித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தர மோகன், ஆசிரியர் தேர்வு வாரிய தலைவர் மற்றும் பொது நூலகத் துறை இயக்குநர் எஸ்.ஜெயந்தி, பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர். ச.கண்ணப்பன், தொடக்கக் கல்வி இயக்குநர் பூ.ஆ.நரேஷ், அரசுத் தேர்வுகள் இயக்குநர் க.சசிகலா, தனியார் பள்ளிகள் இயக்குநர் எஸ்.சுகன்யா, அண்ணா நூற்றாண்டு நூலக முதன்மை நூலகர் காமாட்சி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பின்வாசல் வழியாக ஆட்சி அமைக்க எடப்பாடி பழனிசாமி நினைத்தார்: ஆதவ் அர்ஜுனா குற்றச்சாட்டு



சென்னை, மே.21-

சென்னை கிண்டியில் பொதுப்பணித்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

அமைச்சரவை விரிவாக்கம் கூடிய விரைவில் அறிவிக்கப்படும். காங்கிரஸ், விசிக, ஐயுஎம்எல் என எல்லோரும். அமைச்சரவையில் இடம்பெற வேண்டும் என்ற எங்கள் விருப்பத்தை தெரிவித்திருக்கிறோம். உடனடியாக கலந்தாலோசித்து முடிவு சொல்வதாக சொல்லி இருக்கிறார்கள்; நல்ல செய்தி வரும் என நினைக்கிறோம்.

அன்பான குடும்பம்போல அமைச்சரவை இருக்க வேண்டும் என முதல்அமைச்சர் விஜய் விரும்புகிறார். வெளியில் இருந்து ஆதரவு கொடுத்துள்ள இடதுசாரிகளின் கொள்கை முடிவுகளை நாங்கள் மதிப்போம். சமூகநீதி அடிப்படையில் இயங்கும் தலைவர்கள், கட்சிகள் அமைச்சரவையில் இணைய வேண்டும்.

மக்களின் தீர்ப்புக்கு எதிராக எடப்பாடி பழனிசாமி செயல்பட நினைத்ததால் அதிமுகவின் ஒரு தரப்பினர் எங்களுக்கு ஆதரவு தந்தனர். எம்.எல்.ஏ.க்கள் யாருக்கு ஆதரவளிக்க வேண்டும் என்பது அவர்கள் உரிமை; அவர்களை சி.வி.சண்முகம் வழிநடத்துவார். சட்ட சிக்கல் வந்தால் சி.வி.சண்முகம் சந்திப்பார்; அதிமுக நன்றாக இருக்க வேண்டும் என்பது எங்களது வேண்டுகோள். எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா உருவாக்கிய அதிமுகவை நாங்கள் தோழமையுடன் தான் பார்க்கிறோம்.

தேர்தலில் தோல்வியை தழுவிய பிறகு நல்ல எதிர்க்கட்சியாக எடப்பாடி பழனிசாமி செயல்பட்டிருக்க வேண்டும். பின்வாசல் வழியாக ஆட்சி அமைக்க எடப்பாடி பழனிசாமி நினைத்தார். திமுகவுடன் எடப்பாடி பழனிசாமி கைகோர்க்க நினைத்ததை தற்கொலைக்கு சமம் என அதிமுகவினர் கருதினர். பாஜகவுடன் அதிமுக சேர்ந்தது மிகப்பெரிய அதிருப்தி என அதிமுக தொண்டர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

திமுக தனது கொள்கைகளை மறந்து அதிமுகவுக்கு ஆதரவளிக்க முயற்சித்தது. மு.க.ஸ்டாலின், உதயநிதி ஸ்டாலின், எடப்பாடி பழனிசாமி ஆகியோர் இணைந்து குதிரை பேர அரசியலை உருவாக்கினர். இவ்வாறு அவர் கூறினார்.

தொடர்ந்து அமைச்சரவையில் சி.வி.சண்முகம் அணி இடம்பெறுமா? என்ற கேள்விக்கு "யூகங்களுக்கு பதிலளிக்க முடியாது. அமைச்சர் பதவிக்காக அவர்கள் எங்களிடம் வரவில்லை" என கூறினார்.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000




# காடையாம்பட்டிக்குக் கிடைத்த பெருமை! அரசு மாதிரிப் பள்ளியில் படித்து 495 மார்க் அள்ளிய மாணவி ஹர்ஷினி தேவி

காடையாம்பட்டி மே,21-
சேலம் மாவட்டம், காடையாம்பட்டி அரசு மாதிரிப் பள்ளியில் பயின்ற மாணவி ஹர்ஷினி தேவி, பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் 500க்கு 495 மதிப்பெண்கள் பெற்று பள்ளியளவில் முதலிடம் பிடித்து வரலா ற்றுச் சாதனை படைத்துள்ளார்.

*விடாமுயற்சி தந்த வெற்றி:*கிராமப்புறச் சூழலில் வறுமையையும், பல்வேறு சவால்களையும் எதிர்கொண்டு, கல்வி ஒன்றே முன்னேற்றத்திற்கான வழி என்பதைத் தனது விடாமுயற்சியால் நிரூபித்துக் காட்டியுள்ளார். இந்த உயரிய வெற்றி அப்பகுதி மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடையே பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.*மாணவி மற்றும் தலை மை ஆசிரியர் நெகிழ்ச்சி:*"எனது ஆசிரியர்களின் வழிகாட்டுதலும், பெற்றோரின் அர்ப்பணிப்புமே இந்த வெற்றிக்குக் காரணம்" என்று மாணவி ஹர்ஷினி தேவி மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார். இச்சாதனை குறித்துப் பேசிய பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. அருண் குமார், "ஹர்ஷினி தேவியின் தன்னம்பிக்கை, காடையாம்பட்டி பகுதி மாணவர்களுக்கு ஒரு சிறந்த முன்னுதாரணம்" என்று பெருமிதம் தெரிவித்தார். சாதனை படைத்த மாணவிக்கு ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் நெகிழ்ச்சியுடன் பாராட்டுகளைக் குவித்து வருகின்றனர்.

# “தோல்விதான் சிறந்த பாடங்களை கற்று தருகிறது” பிடிஆர் பழனிவேல் தியாகராஜன்



மதுரை:மே 21-
மதுரை அண்ணா நகர் பகுதியில் மாநகர் மாவட்ட திமுக செயற்குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு அவைத்தலைவர் ஒச்சுபாலு தலைமை வகித்தார்.மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி முன்னிலை வகித்தார். முன்னாள் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் கட்சியினருக்கு சிறப்பு ஆலோசனைகள் வழங்கினார்.அப்போது அவர் பேசியதாவது: முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி இறந்தவுடன் தேர்தல் அலை வந்தது. பின்னர் 2011ல் ஒரு தேர்தல் அலை வந்தது. அதேபோன்று தற்போது, கண்ணுக்குத் தெரியாத அலை வந்துள்ளது.

நாம் தவெகவை சரியாக கணிக்காததால், சாதாரணமாக எண்ணி விட்டோம். கடந்த காலங்களில் எதிர்க்கட்சியாக இருந்தால்கூட 40 சதவீதம் வாக்கு வாங்குவோம். ஆனால், தற்போதைய தேர்தலில் நமது வாக்கு சதவீதம் மிகவும் குறைந்துள்ளது.எனவே, இனி வருங்காலங்களில் நாம் ஒருவரை ஒருவர் குறை கூறாமல், நம்மை நாமே சுயபரிசோதனை செய்துகொள்ள வேண்டும். வெற்றியை விடத் தோல்விதான் சிறந்த பாடங்களையும் அனுபவங்களையும் கற்றுத் தருகிறது.நமது இயக்கம் நிரந்தரமானது, நமது தத்துவம் கொள்கை நிரந்தரமானது, ஆனால் செயல்முறைகளை நாம் மாற்றத்துக்கு உட்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். இது ஆட்சி மற்றும் கட்சி நிர்வாகம் இரண்டுக்கும் பொருந்தும். எனவே, விருப்பு வெறுப்பு இல்லாமல் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டு, அடுத்த கட்டத்தை நோக்கி பயணிக்க வேண்டும். திமுக கள ஆய்வுக் குழுவினரிடம் உங்கள் குறைகளை கூறலாம். இவ்வாறு அவர் பேசினார்.இக்கூட்டத்தில், முன்னாள் அமைச்சர் பொன். முத்துராமலிங்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மா.ஜெயராமன், வேலுச்சாமி, முன்னாள் மேயர் குழந்தைவேலு உட்பட கட்சி நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர். மதுரை மாநகர் மாவட்ட திமுக செயற்குழு கூட்டத்தில் பங்கேற்ற முன்னாள் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், மாவட்டச் செயலாளர் கோ.தளபதி உள்ளிட்டோர்.



# த.வெ.கவில் இணைந்த கீதாபாலாஜியைப் பொன்னாடை அணிவித்து வரவேற்ற விஜய்அன்பன் கல்லானை

அலங்காநல்லூர் மே 21-
மதுரை மாவட்டத்தில் தமிழக வெற்றி கழகத்தின் (த.வெ.க) மக்கள் செல்வாக்கு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், அலங்காநல்லூர் பேரூராட்சி முன்னாள் தலைவரான (சேர்மன்) கீதாபாலாஜி இன்று தனது 100க்கும் மேற்பட்ட ஆதரவாளர்களுடன் த.வெ.கவில் அதிகாரப்பூர்வமாகத் தன்னை இணைத்துக் கொண்டார்.

*ஆதரவாளர்களுடன் திரண்ட முன்னாள் சேர்மன்:*மதுரையில் உள்ள த.வெ.க கட்சி அலுவலகத்திற்குத் தனது 100க்கும் மேற்பட்ட தீவிர ஆதரவாளர்களுடன் நேரில் வருகை தந்த முன்னாள் சேர்மன் கீதாபாலாஜி, கட்சியின் மாவட்டச் செயலாளர்கள் விஜய்அன்பன் கல்லானை, விஷால்கிருஷ்ணா ஆகியோர் தலைமையிலும், அலங்காநல்லூர் ஒன்றியச் செயலாளர் விஜய்ஹரிஷ், நகரச் செயலாளர் தளபதிரஞ்சித் ஆகியோர் முன்னிலையிலும் தமிழக வெற்றி கழகத்தில் இணைந்தார்.

*பொன்னாடை அணிவித்து சிறப்பான வரவேற்பு:*கட்சியில் இணைந்த முன்னாள் சேர்மன் கீதாபாலாஜி அவர்களுக்கு மாவட்டச் செயலாளர் விஜய்அன்பன் கல்லானை பொன்னாடை அணிவித்து, கட்சிக் கொடியை வழங்கிச் சிறப்பான முறையில் வரவேற்றார். அதனைத் தொடர்ந்து, அவருடன் வந்திருந்த ஆதரவாளர்கள் அனைவரும் மாவட்டச் செயலாளர்களுக்குப் பொன்னாடை அணிவித்து, தங்களது வாழ்த்துகளைப் பெற்றுக் கொண்டனர். இவர்களின் இந்த அதிரடி வரவு அலங்காநல்லூர் வட்டார அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# கிளாம்பாக்கம் ரயில் நிலைய பணிகள் நிறைவு: விரைவில் மக்கள் பயன்பாட்டுக்கு திறக்க திட்டம்



சென்னை::மே 21-
போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில், வண்டலூரை அடுத்த கிளாம்பாக்கத்தில் புதிய பேருந்து நிலையம் கடந்த 2023ம் ஆண்டு டிசம்பரில் திறக்கப்பட்டது. இப்பேருந்து நிலையத்தின் அருகில், தாம்பரம் செங்கல்பட்டு ரயில் பாதை இருக்கிறது. இருப்பினும், ரயில் நிலையம் இல்லை. இதனால் இங்கு மின்சார, விரைவு ரயில்களை நிறுத்த முடியாத நிலை இருக்கிறது. இங்கு ரயில் நிலையம் அமைக்க பயணிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.இதையடுத்து, ரூ.20 கோடி மதிப்பீட்டில் வண்டலூர் ஊரப்பாக்கம் இடையே கிளாம்பாக்கத்தில் புதிய ரயில் நிலையம் அமைக்கப்படுவதற்கு தெற்கு ரயில்வே சென்னை ரயில்வே கோட்டம் கடந்த 2024ம் ஆண்டு அக்டோபரில் ஒப்பந்தப்புள்ளி கோரியது. இதையடுத்து, ஒப்பந்தம் வழங்கப்பட்டு, ரயில் நிலைய கட்டுமானப் பணிகள் தொடங்கி, அனைத்து பணிகளும் நிறைவடைந்துவிட்டன.3 கட்டங்களாக பணி: அதே நேரத்தில், புதிய ரயில் நிலையத்தையும் ஜிஎஸ்டி சாலையின் மறுபுறம் அமைந்துள்ள கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தையும் இணைக்கும் வகையில், பிரம்மாண்ட ஆகாய நடை மேம்பாலம் அமைக்கும் பணி நடைபெறுகிறது. சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில், 3 கட்டங்களாக இந்தப் பணி மேற்கொள்ளப்படுகிறது.இந்த நடைப் பாலத்தில் பயணிகளின் வசதிக்காக, இருபுறமும் மின்தூக்கிகள் அமைக்கப்பட உள்ளன. ஒட்டுமொத்தப் பணிகளும் இந்த மாதத்துக்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுகுறித்து, சென்னை ரயில்வே கோட்ட அதிகாரி ஒருவர் கூறுகையில், “கிளாம்பாககம் ரயில் நிலைய பணிகள் நிறைவடைந்துள்ளன. அதாவது ரயில்வே தரப்பில் அனைத்து பணிகளும் நிறைவடைந்துவிட்டன. மாநில அரசு சார்பில் மேற்கொள்ளப்படும் பணி நடைபெறுகிறது. இந்நிலையம் விரைவில் திறக்கப்படும்” என்றார்.

# “அதிமுக திமுக கூட்டணி முயற்சி நடந்திருக்க வாய்ப்பில்லை” செல்வப்பெருந்தகை

சென்னை: மே 21-
“அதிமுக திமுக கூட்டணி குறித்து பத்திரிகைகளில் நான் சில செய்திகளைப் பார்த்தேன். அதுபோன்ற முயற்சி நடந்திருக்குமா என்பது மில்லியன் டாலர் கேள்வியாக உள்ளது. அதுபோல நடந்திருக்க வாய்ப்பில்லை என்பதே எனது தனிப்பட்ட கருத்து” என தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.



சென்னை கிண்டியில் அயோத்திதாச பண்டிதர் மணிமண்டபத்தில் மரியாதை செலுத்திய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை, “2023ல் முதல்வராக இருந்த மு.க.ஸ்டாலின், சட்டப்பேரவையில் நாங்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, இங்கே அயோத்திதாசர் மணிமண்டபத்தை நிறுவினார். அவருக்கு நாங்கள் எப்போதும் கடமைப்பட்டுள்ளோம். இந்த மணிமண்டபத்தை பேணிக் காக்க வேண்டும் என்பதே புதிய அரசுக்கான எங்களின் கோரிக்கை.

தவெக அரசில் எத்தனை காங்கிரஸார் அமைச்சராக பதவியேற்பார்கள் என விரைவில் அறிவிப்பு வரும். அதிமுகவிலிருந்து சிலர் தவெக அரசுக்கு ஆதரவு அளித்துள்ளனர். ஒருவேளை அதிமுகவினருக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட்டால், அதுபற்றி கட்சிக்குள் ஆலோசிப்போம். அதுகுறித்து பரிசீலனை செய்வோம். அதிமுக திமுக கூட்டணி குறித்து பத்திரிகைகளில் தான் சில செய்திகளைப் பார்த்தேன். அதுபோன்ற முயற்சி நடந்திருக்குமா என்பது மில்லியன் டாலர் கேள்வியாக உள்ளது. அதுபோல நடந்திருக்க வாய்ப்பில்லை என்பதே எனது தனிப்பட்ட கருத்து.” என்று தெரிவித்துள்ளார்.

# நெல்லை மாவட்டம் பழவூர் அருகே கார் மோதிய விபத்தில் 2 சிறுவர்கள் உயிரிழப்பு!!

நெல்லை:மே,21-
நெல்லை மாவட்டம் பழவூர் அருகே கார் மோதிய விபத்தில் 12 வயது சிறுவர்கள் 2 பேர் உயிரிழந்தார். நெல்லையில் இருந்து குமரி நோக்கி சென்ற கார் பழவூர் அருகே சாலையோரம் நடந்து சென்ற சிறுவர்கள் மீது மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. அதிவேகமாக சென்ற கார் மோதிய விபத்தில் சிறுவர்கள் வினிஷ் (12), விஷ்வா (12) ஆகியோர் உயிரிழந்த சோகம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது

# மும்பை பங்குச் சந்தை குறியீட்டு எண் சென்செக்ஸ் 117 புள்ளிகள் உயர்வு!!



மும்பை:மே,21-
மும்பை பங்குச் சந்தை குறியீட்டு எண் சென்செக்ஸ் 117 புள்ளிகள் உயர்ந்து 75,318 புள்ளிகளானது. வர்த்தகம் தொடங்கியதில் இருந்து ஏற்ற இறக்கங்களுடன் காணப்பட்ட பங்குச் சந்தை 0.16% உயர்ந்து முடிந்தது. தேசிய பங்குச் சந்தை குறியீட்டு எண் நிஃப்டி 41 புள்ளிகள் உயர்ந்து 23,659 புள்ளிகளானது



■ பல்வேறு அரசு மற்றும் கட்சிப் பணிகளுக்காக திசையன்விளைக்கு வருகை தந்த தமிழக வெற்றிக் கழகத்தின் (தவெக) நெல்லை மாவட்ட செயலாளர் ராஜகோபாலுக்கு, திசையன்விளை நகர செயலாளர் 'கில்லி' ராஜா தலைமையில் கட்சியின் அனைத்துப் பொறுப்பாளர்களும், தொண்டர்களும் திரண்டு வந்து சால்வை அணிவித்து உற்சாக வரவேற்பு அளித்தனர்.

# காரைக்கால் பேரளம் இடையே 40 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் தொடங்கிய ரயில் சேவை



காரைக்கால்: மே 21-
காரைக்கால் பேரளம் இடையே ரயில் போக்குவரத்து சேவை 40 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் துவங்கப்பட்டுள்ளது.

முன்னதாக கடந்த ஆண்டு இதற்கான இறுதிகட்ட சோதனை நடைபெற்றது. அதனை தொடர்ந்து இந்த ஒரு ஆண்டுகளாக சரக்கு ரயில் போக்குவரத்து சேவை மட்டும் நடைபெற்று வந்த நிலையில் இன்று முதல் காரைக்கால் பேரளம் இடையிலான பயணிகள் ரயில் போக்குவரத்து தொடங்கியது. இதனையடுத்து இன்று மக்களின் பயன்பாட்டிற்கு வந்த திருநள்ளாறு ரயில் நிலையத்தில் காரைக்காலில் இருந்து பேரளம் வழித்தடத்தில் மயிலாடுதுறைக்கு செல்கின்ற ரயிலுக்கு, காரைக்கால் ரயில் பணிகள் சங்கம் மற்றும் திருநள்ளாறு பகுதி மக்கள் சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. மேலும், 40 ஆண்டுகளுக்கு பிறகு திருநள்ளாறு பகுதியில் ரயில் வந்ததால் பொதுமக்கள் இனிப்புகள் வழங்கி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

இந்நிலையில் ஆன்மீக தலங்கள் அமைந்துள்ள திருநள்ளாறு கோயில், நாகூர் தர்கா மற்றும் வேளாங்கண்ணி ஆலயம் உள்ளிட்ட அனைத்து பகுதிகளுக்கும் பொதுமக்கள் சிரமமின்றி போகலாம். மேலும் இந்த ரயில் போலவே திருச்செந்தூர், ராமேஸ்வரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு செல்ல தங்களுக்கு ரயில் சேவை வேண்டும் என்று காரைக்கால் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

# பஞ்சப்பூரில் இருந்து இரவு வேளையில் போதிய பேருந்து சேவை இல்லாமல் மக்கள் அவதி



திருச்சி: மே 21-
திருச்சி பஞ்சப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தில் இருந்து இரவு வேளையில் நகரப் பகுதிகளுக்கு போதிய பேருந்துகள் இயக்கப்படாததால் பொதுமக்கள் மிகுந்த அவதிக்குள்ளாகி வருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.பஞ்சப்பூர் பேருந்து முனையத்தில் இருந்து தமிழகம் மட்டுமின்றி பெங்களூரு, திருவனந்தபுரம், திருப்பதி, ஐதராபாத் போன்ற நகரங்களுக்கும் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. ஆனால், திருச்சி மாநகரின் பல்வேறு பகுதிகளுக்கு இங்கிருந்து பேருந்து சேவை மிகக் குறைவாக உள்ளதுடன், சில பகுதிகளுக்கு பேருந்து சேவையே இல்லை என்றும், இரவு வேளையில் மிக மிக குறைந்த எண்ணிக்கையில் மட்டுமே பேருந்துகள் இயக்கப்படுவதாகவும் பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.போதிய பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுக்கக் கோரி தமிழக முதல்வரின் தனிப் பிரிவுக்கு மனு அனுப்பியுள்ள உறையூர் மேட்டுத் தெருவைச் சேர்ந்த ஜி.பெல்சன், ‘இந்து தமிழ் திசை’ நாளிதழிடம் கூறியது: திருச்சிக்கு பெருமை சேர்க்கும் வகையில் பஞ்சப்பூர் பேருந்து முனையம் அமைக்கப்பட்டுள்ளது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.ஆனால், பஞ்சப்பூரில் இருந்து மாநகரின் பல்வேறு பகுதிகளுக்குச் செல்ல போதிய பேருந்து சேவை இல்லாமல் படாத பாடு பட வேண்டியுள்ளது. பஞ்சப்பூரில் இருந்து கே.கே.நகர், தில்லை நகர், உறையூர், ஸ்ரீரங்கம், காட்டூர், திருவெறும்பூர், துவாக்குடி என பல்வேறு பகுதிகளுக்குச் செல்ல மன்னார்புரம், காந்தி மார்க்கெட், சத்திரம் பேருந்து நிலையத்துக்குச் சென்று அங்கிருந்து பேருந்து மாறிச் செல்ல வேண்டியுள்ளது.இரவு வேளையில் சத்திரம் பேருந்து நிலையத்துக்கு 3 பேருந்துகள் மட்டுமே இயக்கப்படுகின்றன. ஸ்ரீரங்கத்துக்கோ, சமயபுரத்துக்கோ செல்ல வேண்டுமெனில் பேருந்து நிலையத்திலேயே விடிய விடிய காத்திருக்க வேண்டியுள்ளது.அல்லது ஆட்டோ உள்ளிட்ட வாடகை வாகனங்களில் குறைந்தபட்சம் ரூ.500 வரை கொடுத்துச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. எனவே, ஏற்கெனவே இருந்ததுபோல மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து பாதி பேருந்துகளை இயக்க வேண்டும் என முதல்வரின் தனிப் பிரிவுக்கு மனு அனுப்பி உள்ளேன் என்றார். இதுகுறித்து போக்குவரத்துக் கழக அலுவலர்கள் கூறியது: பஞ்சப்பூரில் இருந்து இரவு வேளையில் 3 மாநகர பேருந்துகள் தினமும் இயக்கப்படுகின்றன. மேலும், வெவ்வேறு இடங்களில் இருந்து பஞ்சப்பூர் வழியாக 4 கனெக்டிங் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.பஞ்சப்பூரில் இருந்து இரவு வேளையில் பெரம்பலூர், கோயம்புத்தூர், துறையூர் உள்ளிட்ட பகுதிகளுக்கு இயக்கப்படும் அனைத்து புறநகரப் பேருந்துகளும் சத்திரம் பேருந்து நிலையம் வழியாகத்தான் இயக்கப்படுகின்றன. இரவு நேரத்தில் கூடுதல் பேருந்துகள் இயக்க வேண்டும் என எங்களுக்கு எவ்வித கோரிக்கையும் இதுவரை வரவில்லை என்றனர்.இந்நிலையில், போக்குவரத்துக் கழக கும்பகோணம் கோட்டத்தைப் பிரித்து, திருச்சியைத் தலைமையிடமாகக் கொண்ட போக்குவரத்துக் கழக கோட்டம் அமைத்தால்தான் இதுபோன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்க வாய்ப்பு ஏற்படும் என சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

# தென்மேற்கு பருவமழையை சமாளிக்க முன்னெச்சரிக்கையாக கேரளா செல்லும் தேசிய பேரிடர் மீட்பு படை.!




அரக்கோணம்:மே 21-

கேரளாவில் தென்மேற்கு பருவமழை தொடங்க உள்ளதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அரக்கோணத்தில் இருந்து தேசிய பேரிடர் மீட்பு படையின் (NDRF) 8 குழுக்களை கேரளாவிற்கு விரைந்து அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.கேரள மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் (KSD-MA) கோரிக்கையைத் தொடர்ந்து, 2026ஆம் ஆண்டின் தென்மேற்கு பருவமழைக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் ஒரு பகுதியாக, தேசியப் பேரிடர் மீட்புப் படையின் 8 குழுக்கள் (மொத்தம் 240 வீரர்கள்) கேரளாவின் பல்வேறு மாவட்டங்களில் பணியில் ஈடுபடுத்தப்பட்ட உள்ளனர். ழிஞ்ஸிதி செயல்பாடுகளின் துணைத் தளபதி பிரவீன் எஸ்.பிரசாத் இதுகுறித்து பேசுகையில், "பருவமழை முன்கூட்டியே தொடங்கும் என இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளதாலும், கேரளாவின் வேண்டுகோளுக்கு இணங்கவும், என்.டி.ஆர்.எஃப் பட்டாலியன்களில் இருந்து எட்டு மீட்புக் குழுக்கள் கேரளவிற்கு அனுப்பப் பட்டுள்ளன.இந்திய சுற்றுலா இந்த குழுக்கள் கேரளாவின் கோழிக்கோடு, வயநாடு, திருச்சூர், எர்ணாகுளம் மற்றும் கொல்லம் உள்ளிட்ட மாவட்டங்களில் இருப்பார்கள். வெள்ளம் மற்றும் நிலச்சரிவு போன்ற பேரிடர்களை எதிர்கொள்ள ரப்பர் படகுகள், மரம் அறுக்கும் கருவிகள் மற்றும் நவீன தகவல் தொடர்பு சாதனங்களுடன் இவர்கள் தயார் நிலையில் இருப்பார்கள். அரக்கோணத்தில் உள்ள தேசிய பேரிடர் மீட்பு படை மையத்தில் இருந்து 24 மணி நேரமும் நிலைமை கண்காணிக்கப்படும். தவிர ஊட்டி, திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் உள்ளிட்ட பகுதிகளை உள்ளடக்கிய வகையில், தமிழ்நாட்டிலும் நான்கு மீட்புக் குழுக்கள் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளன. இதுதவிர, சென்னை மற்றும் அந்தமான் தீவுகளிலும் நாங்கள் மீட்புக் குழுக்களைப் பணியில் அமர்த்தியுள்ளோம் என்று கூறியுள்ளார்

# மதுரை கொல்லம் 4 வழிச்சாலை திட்டத்தில் ராஜபாளையம் ரயில்வே மேம்பால பணிகள் நிறைவு



ராஜபாளையம்::மே 21-

மதுரை கொல்லம் நான்கு வழிச்சாலை திட்டத்தில் ராஜபாளையம் ரயில்வே மேம்பால பணிகள் நிறைவு பெற்றதால் குற்றாலம், கேரளா செல்லும் வாகனங்கள் ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம் நகருக்குள் வராமல் செல்லலாம்.

தமிழகம் கேரள மாநிலங்களையும் இணைக்கும் முக்கிய சாலைகளில் ஒன்றான 230 கிலோ மீட்டர் நீளமுள்ள மதுரைகொல்லம் தேசிய நெடுஞ்சாலை நான்கு வழிச்சாலையாக (என்.ஹெச் 744) தரம் உயர்த்தும் பணிகள் கடந்த 2023 ல் தொடங்கி நடந்து வருகின்றன.

இதில் கிருஷ்ணன்கோவில் ராஜபாளையம் இடையே ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம் நகருக்கு வெளியே 27 கிலோ மீட்டர் தொலைவுக்கு புதிய வழித்தடத்தில் நான்கு வழிச்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

இதில் 2 ரயில்வே மேம்பாலங்கள், 1 மேம்பாலம், 19 பாலங்கள், 16 சுரங்கப்பாதை, 62 நீர்வழிப்பாதைகள் அமைக் கப்பட்டுள்ளன. இச்சாலையில் அழகாபுரி கிருஷ்ணன்கோவில் இடையே நத்தம்பட்டியில் புதிதாக சுங்கச்சாவடி அமைக்கப்பட்டுள்ளது.

நான்கு வழிச்சாலை அமைக்கும் பணிகள் 99.7 சதவீதம் முடிவடைந்த நிலையில், ஏப்ரல் மாதம் வடுகப்பட்டிராஜபாளையம் இடையேயான சாலை பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும் என தேசிய நெடுஞ்சாலை ஆணைய அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால் அழகாபுரி மேம்பாலம், ராஜபாளையம் ரயில்வே மேம்பால பணிகள் நிறைவடையாததால் பயன்பாட்டுக்கு வருவதில் தாமதம் ஏற்பட்டது. தற்போது ராஜபாளையம் ரயில்வே மேம்பாலப் பணிகள் முடிந்து வாகனங்கள் அவ்வழியே செல்லத் தொடங்கியுள்ளன. சங்கரன்கோவில் சாலை வரை நான்கு வழிச்சாலை அமைக்கப்பட்டுள்ள நிலையில், அங்கிருந்து இணைப்புச் சாலை வழியாக தென்காசி சாலையை அடையலாம்.

இதனால் மதுரையில் இருந்து தென்காசி, குற்றாலம், சபரிமலை மற்றும் கேரளாவுக்கு செல்லும் அனைத்து வாகனங்களும் ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம் நகருக்குள் வராமல் செல்ல முடியும்.

குற்றால சீசன் தொடங்கியுள்ள நிலையில், நகர் பகுதியில் வழக்கமாக ஏற்படும் போக்குவரத்து நெரிசல் குறையும் என்பதால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இதுகுறித்து தேசிய நெடுஞ்சாலை ஆணைய மதுரை மண்டல அதிகாரிகள் கூறுகையில், மதுரை கொல்லம் நான்கு வழிச்சாலை மேம்பட்ட போக்குவரத்து மேலாண்மை அமைப்பு (கிஜிவிஷி) மற்றும் புதிய புறவழிச்சாலைகள் மூலம், வணிக வாகனங்கள் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலுக்கு வரும் பக்தர்களின் பாதுகாப்பான பயணத்துக்கு பெரிதும் பயனளிக்கும்.வடுகப்பட்டி தெற்குவெங்கநல்லூர் இடையேயான 36 கிலோ மீட்டர் தூர நான்கு வழிச்சாலை இம்மாத இறுதிக்குள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும்.

இதன் மூலம் ராஜபாளையம் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் குறைவதுடன், ராஜபாளையம்மதுரை இடையேயான பயண நேரம் பாதியாக குறையும், என்றனர்

# "நம்மை பலப்படுத்தி கொண்டால் திமுக வெற்றி சாத்தியமாகும்" கனிமொழி எம்.பி. விளக்கம்



தூத்துக்குடி:மே 21-

நம்மை பலப்படுத்திக் கொண்டால் யாரும் இல்லாமல் திமுகவால் வெற்றி பெற முடியும் என கட்சி நிர்வாகிகளிடம் கனிமொழி எம்.பி. தெரிவித்தார்.தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. சட்டப்பேரவை உறுப்பினர்கள் மார்க்கண்டேயன் (விளாத்திகுளம்), கருணாநிதி (கோவில்பட்டி), தூத்துக்குடி மேயர் ஜெகன் பெரியசாமி, வடக்கு மாவட்ட திமுக செயலாளர் பி.கீதாஜீவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் கனிமொழி பேசியதாவது: நடந்து முடிந்த சட்டப்பேரவை தேர்தலில் நாம் எதிர்பாராத வகையில் தோல்வியை தழுவியுள்ளோம். அதுகுறித்து ஆய்வு செய்ய, தலைவர் ஸ்டாலின் குழு அமைத்துள்ளார். அந்த குழுவினரிடம் கட்சி நிர்வாகிகள் உண்மை நிலவரங்களை தயக்கமின்றி கூற வேண்டும். அது நமது கட்சியை மறுகட்டமைப்பு செய்ய உதவியாக இருக்கும். மேலும், கூட்டணி பற்றி சிந்திக்க வேண்டிய காலக்கட்டத்தில் இருக்கிறோம். நம்மை நாம் பலப்படுத்திக் கொண்டால், யாரும் இல்லாமல் திமுகவால் வெற்றி பெற முடியும். இவ்வாறு பேசினார். வாக்களித்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிப்பது, ஜூன் 3 கருணாநிதி பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# மின்சாரம் தாக்கியதில் தம்பதி உள்ளிட்ட 3 பேர் ஆத்தூரில் உயிரிழப்பு

திண்டுக்கல்:மே 21-

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூரில் மின்கம்பி அறுந்து விழுந்து கணவன், மனைவி மற்றும் கல்லூரி மாணவர் உயிரிழந்தனர்.ஆத்தூர் அக்ரஹாரத்தைச் சேர்ந்தவர் கருப்பையா (41). கொத்தனார். இவரது மனைவி சுதா (37). இவர்கள் அப்பகுதியில் உள்ள மாடி வீட்டில் குடியிருந்து வந்தனர். நேற்று முன்தினம் இரவு பலத்த காற்றுடன் மழை பெய்ததால் வீட்டு மாடியில் மின் கம்பி அறுந்து விழுந்தது.இதை அறியாமல் கருப்பையா அதை மிதித்ததால் மின்சாரம் பாய்ந்தது. இவரின் அலறல் சத்தம் கேட்டுவந்த மனைவி சுதா மீதும் மின்சாரம் பாய்ந்தது. இவர்களை காப்பாற்ற கீழ் வீட்டில் இருந்து வந்த கல்லூரி மாணவர் சுப்பிரமணிய சிவா (18) மீதும் மின்சாரம் பாய்ந்தது. இதில் 3 பேரும் நிகழ்விடத்திலேயே உயிரிழந்தனர். இதுகுறித்து செம்பட்டி போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சென்னையில் சிறுவர்களை வைத்து கஞ்சா விற்பனை.. நான்கு பேர் கைது

சென்னை:மே 21-


சென்னை மாதவரத்தில் கஞ்சா கடத்தி வருவதாக மாதவரம் காவல் நிலைய இன்ஸ்பெக்டருக்கு ரகசிய தகவல் நேற்று இரவு கிடைத்துள்ளது. அதன் பேரில் சிறப்பு தனிப்படை போலீசார் மாதவரத்தில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது 2 சிறுவர்கள் இரு சக்கர வாகனத்தில் கையில் பையுடன் சந்தேகத்திற்கு ஏற்ப சென்று கொண்டிருந்தனர். அவர்களை நிறுத்தி சோதனை செய்த போது அவர்களிடம் இருந்து அரை கிலோ கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டது.

பின்னர் அவர்களிடம் நடத்திய விசாரணையில், அவர்கள் கஞ்சாவை பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு விற்பனை செய்வதற்காக எடுத்து வந்தது தெரிந்தது. மேலும் அவர்களிடம் நடத்திய விசாரணையில் கஞ்சா விற்பனை செய்த வியாபாரி மாதவரம் அடுத்த பால்பண்ணை மாத்தூர் பால சுப்பிரமணியன் நகரை சேர்ந்த பழைய இரும்புக் கடை வைத்திருக்ககும் ராமமூர்த்தி மற்றும் கதிர்வேல் என தெரியவந்தது.

இதனையடுத்து ராமமூர்த்தி நடத்தி வந்த இரும்பு கடையை சோதனை செய்த போது 18 கிலோ கஞ்சாவை போலீசார் பறிமுதல் செய்தனர். இவர்கள் ஒடிசா மாநிலத்தில் இருந்து குறைந்த விலைக்கு கஞ்சாவை வாங்கி வந்து அதிக விலைக்கு விற்பதாக விசாரணையில் தெரியவந்தது. போலீசார் அவர்கள் நால்வர் மீதும் வழக்கு பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்

# சென்னை பெண் உயிரிழப்புக்கு காரணமான யானை சிகிச்சை பலனின்றி இறந்தது



பெங்களூரு:மே 21-

கர்நாடக மாநிலம் குடகில் யானைகளுக்கு இடையே ஏற்பட்ட சண்டையில் சிக்கி சென்னையை சேர்ந்த சுற்றுலா பயணி உயிரிழந்த நிலையில் படுகாயம் அடைந்த மார்த்தாண்டா யானை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தது.

கர்நாடக மாநிலம் குடகில் உள்ள துபாரே யானைகள் முகாமில் நேற்று முன்தினம் மார்த்தாண்டா, கஞ்சன் ஆகிய இரு யானைகளுக்கு இடையே சண்டை ஏற்பட்டது. இதில் இரு யானைகளும் ஒன்றையொன்று தாக்கிக் கொண்டதில் காயமடைந்தன.இந்த யானைகளுக்கு இடையே சிக்கிய சென்னையை சேர்ந்த சுற்றுலா பயணி ஜாய்சி (33) காயமடைந்து உயிரிழந்தார். இந்த சம்பவத்தின் போது அருகிலிருந்த அவரது கணவர் கையில் குழந்தையை வைத்துக் கொண்டு, மனைவியை மீட்க போராடிய காட்சி, இணையத்தில் வைரலானது.மடிக்கேரி அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்கு பின்னர் ஜாய்சியின் உடல் அவரது கணவரிடம் ஒப்படைக்கப்பட்டது. முன்னதாக உயிரிழந்த ஜாய்சியின் கண்களை தானம் செய்தது நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது. இந்நிலையில், உயிரிழந்த ஜாய்சியின் குடும்பத்துக்கு ரூ.20 லட்சம் நிவாரணமாக வழங்கப்படும் என கர்நாடக அரசு சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

துபாரே யானைகள் முகாமில் கஞ்சன் யானை தாக்கியதில் மார்த்தாண்டா யானைக்கு உள் மற்றும் வெளிக் காயம் ஏற்பட்டது. மார்த்தாண்டா யானை பாறைகளுக்கு நடுவில் விழுந்ததில் கழுத்து மற்றும் தலைப் பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டது. அங்கிருந்து அதனை மீட்ட வனத்துறை அதிகாரிகள் மார்த்தாண்டா யானையை மடிக்கேரியில் உள்ள கால்நடை மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சை அளித்தனர். ஆனால், சிகிச்சை பலனின்றி மார்த்தாண்டா யானை உயிரிழந்தது.

53 வயதான மார்த்தாண்டா யானை 4500 கிலோ எடை கொண்டது. 2014ம் ஆண்டு ஹாசன் வனப்பகுதியில் இருந்து மீட்கப்பட்ட இந்த யானை, நன்கு பயிற்றுவிக்கப்பட்டு மைசூரு தசரா ஊர்வலத்துக்கு பயன்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# "தவெக ஆட்சியில் அதிமுகவுக்கு 8 அமைச்சர்கள் கேட்கிறேனா?" லீமா ரோஸ் விளக்கம்



புதுச்சேரி:மே 21-

"நீங்கள் அமைச்சராவீர்களா என்று கேட்கிறீர்கள் அது இறைவன் சித்தம்தான். தவெக ஆட்சியில் நான் 8 அமைச்சர்கள் கோரியுள்ளதாக கேட்கிறீர்கள். அப்படியெல்லாம் இல்லை. மக்களுக்கு நல்லது செய்ய எங்கள் குடும்பத்தினர் அரசியலுக்கு வந்துள்ளோம்." என அதிமுக எம்எல்ஏ லீமா ரோஸ் தெரிவித்துள்ளார்.புதுச்சேரி சட்டப்பேரவையில் நடந்த எம்எல்ஏக்கள் பதவியேற்பு விழாவில் எம்எல்ஏக்களின் குடும்பத்தினர் பங்கேற்றனர். காமராஜர் நகர் சட்டப்பேரவை தொகுதியில் வெற்றி பெற்ற ஜோஸ் சார்லஸ் மார்டின் தாயார் லீமா ரோஸ் கேலரியில் அமர்ந்து பார்த்தார். அவருடன் ஜோஸ் சார்லஸ் மனைவி குடும்பத்தினர் வந்திருந்தனர். லீமா ரோஸ் திருச்சி மாவட்டம் லால்குடி தொகுதியில் அதிமுகவில் வெற்றி பெற்று எம்எல்ஏ ஆனார்.அதைத்தொடர்ந்து முதல்வர் ரங்கசாமியை அவர் சந்தித்தார். பின்பு செய்தியாளர்களிடம் லீமா ரோஸ், "எனது மகன் எம்எல்ஏ ஆனதில் எனக்கு மகிழ்ச்சி. மக்களுக்கு நல்லது செய்ய எங்கள் குடும்பத்தினர் அரசியலுக்கு வந்துள்ளோம்.நீங்கள் அமைச்சராவீர்களா என்று கேட்கிறீர்கள் அது இறைவன் சித்தம்தான். தவெக ஆட்சியில் நான் 8 அமைச்சர்கள் கோரியுள்ளதாக கேட்கிறீர்கள். அப்படியெல்லாம் இல்லை. இது குறித்து தவறாக யூடியூப்பில் செய்தி வெளியிட்டவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளோம். அவதூறாக பேசுவோர் மீது நாங்கள் சட்டப்படி நடவடிக்கை எடுக்கும் முயற்சியிலும் உள்ளோம்" என்றார்.

# "அமைதி ஒப்பந்தத்தில் ஈரான் ஆர்வம்; விரைவில் போர் முடிவுக்கு வரும்" ட்ரம்ப்



வாஷிங்டன் டி.சி.: மே 21-

"அமெரிக்காவுடன் அமைதி ஒப்பந்தம் மேற்கொள்வதை ஈரான் தீவிரமாக விரும்புவதால், மிக விரைவாக நாங்கள் போரை முடிவுக்குக் கொண்டு வருவோம்" என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். வாஷிங்டன் டி.சி.யில் செய்தியாளர்களிடம் பேசிய டொனால்டு ட்ரம்ப், "அவர்கள் ஒரு ஒப்பந்தத்தை மிகவும் தீவிரமாக விரும்புகிறார்கள். எனவே, நாங்கள் இந்தப் போரை மிக விரைவாக முடிவுக்குக் கொண்டு வருவோம்.ஈரான் மீதான தாக்குதல்களுக்கு உத்தரவிடும் நிலைக்கு நெருக்கமாக நான் இருந்தேன். நான் ஒரு மணி நேர தூரத்தில் இருந்தேன். நாங்கள் அனைவரும் புறப்படத் தயாராக இருந்தோம். எனினும், அமைதிப் பேச்சுவார்த்தைகளில் ஈரான் நியாயமாக நடந்து கொள்வதாக கத்தார், ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட நாடுகள் தெரிவித்ததால் தாக்குதல் உத்தரவை நான் தள்ளிப்போட்டேன். இல்லாவிட்டால் அது இப்போது நடந்திருக்கும். சவூதி அரேபியா, கத்தார், ஐக்கிய அரபு அமீரகம், குவைத், பஹ்ரைன் உள்ளிட்ட நாடுகள் பேச்சுவார்த்தைகளில் ஒரு குழுவாக இணைந்து செயல்பட்டன.ஈரான் அணு ஆயுதத்தை வைத்திருக்க அனுமதிக்க முடியாது என்பதால், ஒரு ஒப்பந்தம் செய்ய அந்த நாட்டுக்கு வரையறுக்கப்பட்ட கால அவகாசம் அளிக்க முடிவு செய்தேன். ஈரான் அணு ஆயுதத்தைப் பெற்றால் அது அதைப் பயன்படுத்தும். ஏனெனில், அந்த நாட்டின் தலைமை மிகவும் தீவிரமயமாக்கப்பட்டுள்ளது" என தெரிவித்தார்.மேலும், உலகளாவிய எண்ணெய் விலை கடுமையாக வீழ்ச்சியடையும் என்றும் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்தார். இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், "அங்கு (மேற்கு ஆசியா) ஏராளமான எண்ணெய் உள்ளது. அவை கடுமையாக வீழ்ச்சியடையும். எண்ணெய் விலை கடுமையாக வீழ்ச்சி அடைவதை நீங்கள் காண்பீர்கள்" எனத் தெரிவித்தார்.இதே கருத்தை அமெரிக்க துணை அதிபர் ஜே.டி. வான்ஸ்ம் தெரிவித்தார். "ஈரானுடனான பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இரு தரப்பினரும் ராணுவ நடவடிக்கையை மீண்டும் தொடங்க விரும்பவில்லை" என ஜே.டி. வான்ஸ் கூறியிருந்தார்.இந்நிலையில், சர்வதேச சந்தையில் இன்று (புதன்கிழமை) கச்சா எண்ணெய் விலைகள் குறைந்தன. பிரென்ட் கச்சா எண்ணெய் விலை ஒரு பீப்பாய் 110.83 அமெரிக்க டாலராக விற்பனையானது.

# "அமைச்சர் பதவிக்காக அதிமுகவை அழிக்கிறார் சி.வி.சண்முகம்" அக்ரி கிருஷ்ணமூர்த்தி சாடல்



சென்னை:மே 21-

"சி.வி.சண்முகம் அமைச்சர் பதவி என்ற சுகத்துக்காக அதிமுகவை அழித்துக் கொண்டிருக்கிறார்" என அதிமுக முன்னாள் அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.எடப்பாடி பழனிசாமி தரப்பில் அதிமுகவின் கொறடாவாக நியமிக்கப்பட்டவர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி. அவர் இன்று செய்தியாளர்களிடம் பேசும்போது, "அதிமுகவின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தனது தொகுதியில் 98 ஆயிரத்துக்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்று வெற்றி வாகை சூடியிருக்கிறார்.முன்னாள் முதல்வர் ஸ்டாலின், பாஜக மாநிலத் தலைவர் ஆகியோர் தங்களது தொகுதியில் வெற்றி வாய்ப்பை இழந்தனர். '10 தோல்வி கண்ட பழனிசாமி' என மு.க.ஸ்டாலின் சொல்வார். ஆனால் தற்போது அவர்தான் படுதோல்வியைச் சந்தித்துள்ளார்.நேற்று அதிமுகவின் மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் சென்னை ராயப்பேட்டையில் சிறப்பாக நடந்தது. 78 மாவட்டச் செயலாளர்களில் 75 பேர் நேரடியாக பங்கேற்றனர். ஒட்டுமொத்த அதிமுகவினர் அதாவது 95 சதவீதம் பேர் பழனிசாமி தலைமையில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றனர். அதிமுக சிறப்பான எதிர்க்கட்சியாக செயல்படுவோம். எடப்பாடியாரின் முடிவுக்கு கட்டுப்படுவோம் எனக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சி.வி.சண்முகம் கட்சியின் கோட்பாடுகளுக்கு முரணாகச் செயல்பட்டார் என்பதற்காக தற்போது பொறுப்புகளில் இருந்து நீக்கப்பட்டிருக்கிறார். பொதுக்குழுவை கூட்டுவது குறித்து தலைமை முடிவு செய்யும்.ஜெயலலிதாவால் அடையாளம் காட்டப்பட்டவர். பின்னர், மாவட்டச் செயலாளர் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டவர் சி.வி.சண்முகம். அதன் பிறகு அதிமுகவின் எடப்பாடி பழனிசாமி பொதுச்செயலாளராக பொறுப்பேற்ற பிறகு இழந்த மாவட்டச் செயலாளர் பதவியை அவருக்கு திரும்பக் கொடுத்தார் இபிஎஸ். 2021ல் தோல்வியை சந்தித்த சி.வி.சண்முகம், வற்புறுத்திக் கேட்டதால் அவரை மாநிலங்களவை உறுப்பினர் ஆக்கினார். இப்படியாக, சி.வி.சண்முகத்துக்கு பல்வேறு வாய்ப்புகளை வழங்கியவர் எடப்பாடி பழனிசாமி. வேலுமணி

சி.வி.சண்முகம் பல்வேறு தவறான குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர்.2026 சட்டப்பேரவை தேர்தலில் விழுப்புரம் மாவட்டத்திலுள்ள மயிலம் தொகுதியில், சி.வி.சண்முகம் இடம் மாறி நிற்பதற்கு வாய்ப்பு கேட்டார். அதையும் எடப்பாடி பழனிசாமி பெருந்தன்மையோடு வழங்கினார். அந்த தேர்தலில் அவரால் பரிந்துரை செய்யப்பட்ட விழுப்புரம், வானூர், திண்டிவனம் சட்டமன்ற வேட்பாளர்கள் தோல்வியை தழுவினார்கள்.இவர் மட்டுமே மயிலம் சட்டப்பேரவைத் தொகுதியில் வெற்றி பெற்றார். இந்த மாவட்டத்தில் அதிமுக தோல்வியுறுவதற்கு இவர் தான் காரணம். அதிமுகவின் வளர்ச்சிக்காக எந்தவித பணியையும் மேற்கொள்ளவில்லை. தனது சுயநலத்துக்காக, சுய லாபத்துக்காக இன்று நாம் யாரை எதிர்த்துப் போட்டியிட்டோமோ அவர்களுடன் இணைந்து அமைச்சர் பதவி என்ற சுகத்துக்காக இந்த இயக்கத்தை அழித்துக் கொண்டிருக்கிறார்" இவ்வாறு அவர் கூறினார்.



■ தமிழக வெற்றிக் கழகத்தின் ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி ஒன்றிய செயலாளர் கௌதமன் மற்றும் கொடுமுடி ஒன்றிய செயலாளர் ராம் பிரகாஷ் முன்னிலையில் கொடுமுடி ஒன்றியத்திற்க்கு உட்பட்ட பேரூர் மற்றும் ஊராட்சி செயலாளர்கள் தங்கள் பகுதியின் நீண்டகால பிரச்சினைகளை பற்றிய கோரிக்கைகளை அளித்தனர். இதில் கொடுமுடி ஒன்றிய பொருளாளர் தளபதி செல்வா, பாசூர் பேரூர் செயலாளர் மு.ஞானசேகரன், கிளாம்பாடி பேரூர் செயலாளர் அருண்குமார், வெள்ளோட்டாம்பரப்பு பேரூர் செயலாளர் சண்முகம், கொளாநல்லி ஊராட்சி செயலாளர் அம்சு சுப்ரமணி, எழுநூத்திமங்கலம் ஊராட்சி செயலாளர் வடிவேல் ஆகியோர் அவர்களது கோரிக்கைகளை அளித்தனர்.

## ஈரோடு பாசூர் அரசு மேல்நிலைப்பள்ளி 10 ஆம் வகுப்பு பொது தேர்வில் 98.3 % தேர்ச்சி

ஈரோடு,மே,21-

ஈரோடு மாவட்டம் கொடுமுடி வட்டம் பாசூர் அரசு மேல்நிலைப் பள்ளியானது 1962 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அந்த பகுதிகளில் மாணவ, மாணவிகளுக்கு தரமான கல்வியை வழங்கி முன்னணி பள்ளியாக திகழ்ந்து வருகிறது. 458/500 மதிப்பெண் பெற்று எஸ்.ஸ்ருதி என்ற மாணவி பள்ளியில் முதலிடம், 454/500 மதிப்பெண் பெற்று எஸ். தனுஶ்ரீ என்ற மாணவி பள்ளியில் இரண்டாவது இடமும், 451/500 மதிப்பெண்கள் பெற்று எஸ்.என்.அஸ்விந்த் என்ற மாணவன் பள்ளியில் மூன்றாவது இடமும் பெற்று சாதனை படைத்துள்ளனர். சிறப்பாக தேர்வு எழுதிய அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் அதற்கு உறுதுணையாக இருந்த தலைமை ஆசிரியர் மற்றும் இருபால் ஆசிரியர் பெருமக்களுக்கு ஊர் பொதுமக்கள், பெற்றோர் ஆசிரியர் கழகம் மற்றும் முன்னாள் மாணவர்கள் அறக்கட்டளை சார்பாக நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டனர்.






■ தென்மேற்கு பருவமழை தொடங்க இருப்பதால் தென்காசி மாவட்டம், குற்றாலம் மெயினருவி, புலியருவி, பழைய குற்றாலம் ஆகிய பகுதிகளில் சுற்றுலாத்துறையின் அருவி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் உடை மாற்றும் அறை, சாலைகள் சீரமைப்பு மற்றும் பல்வேறு அடிப்படை உட்கட்டமைப்புகளுடன் கூடிய சுற்றுலா வளர்ச்சி திட்டப்பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர்., இ.ஆ.ப. பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வில், சுற்றுலா அலுவலர் ந.நித்திய கல்யாணி, பேரூராட்சி உதவி செயற்பொறியாளர் திருச்செல்வம் ஆகியோர் உடனிருந்தனர்.



■ புதுச்சேரி காமராஜ் நகர் தொகுதியின் சட்டப்பேரவை உறுப்பினராகப் பொறுப்பேற்றபின், லால்குடி தொகுதியின் விலிகிலீமாரோஸ் மார்டின், சிந்துஶ்ரீ சார்லஸ், மகள் த்ரிலக்ஷா சார்லஸ், கமலக்கண்ணன், புதுச்சேரியின் முதலமைச்சர் ரங்கசாமிக்குப் பொன்னாடை போர்த்தியும், பூச்செண்டு வழங்கியும் மரியாதை செலுத்தினர். திருவண்ணாமலையாரின் படத்தை வழங்கி வாழ்த்துப்பெற்றனர். உடன் லியிரி முதன்மைச்செயலாளர் சுரேஷ், பொதுச்செயலாளர் பிரபாகரன், மூத்த ஆலோசகர் ஜெய்சங்கர் மற்றும் பல முக்கிய நிர்வாகிகள் இருந்தனர்.



■ தென்காசி வடக்கு மாவட்டம் சிவகிரி ராஜாஜி தெருவில் வசித்து வரும் சிவகிரி பேரூர் கழக பொறுப்பாளர் வி.எஸ்.ஜி. சேதுசுப்பிரணியன் (வயது 46) கடந்த சில நாட்களுக்கு முன்பு ஏற்பட்ட திடீர் உடல் நலக்குறைவு காரண மாக மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். ம் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா, முன்னாள் அமைச்சர் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ச.தங்கவேலு தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார் ஆகியோர் அன்னாரது உடலுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

## வக்பு வாரியக் கல்லூரி வளாகத்தில் மாபெரும் தூய்மைப் பணி! கலெக்டர், வடக்கு MLA. கல்லாணை பங்கேற்ப்பு

மதுரை மே,21-

மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டத்திற்குட்பட்ட வக்பு வாரியக் கல்லூரி வளாகத்தில் மாபெரும் தூய்மைப் பணி முகாம் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது.*கலெக்டர் மற்றும் எம்.எல்.ஏ தொடங்கி வைத்தனர்:*

கல்லூரி வளாகத்தை அகத்தூய்மையோடு புறத்தூய்மையாகவும் பராமரிக்கும் நோக்கில் நடைபெற்ற இம்மாபெரும் தூய்மைப் பணியினை, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார், மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் அ.கல்லாணை நேரில் கலந்துகொண்டு தொடங்கி வைத்தனர்.*நவீன இயந்திரங்கள் மூலம் குப்பைகள் அகற்றம்:*வளாகத்தின் பல பகுதிகளில் தேங்கிக் கிடந்த குப்பைகள் மற்றும் கழிவுகளைப் போர்க்கால அடிப்படையில் அகற்றுவதற்காக 1 ஜே.சி.பி. (JCB) இயந்திரம், 2 காம்பாக்டர் வாகனங்கள், 2 டிப்பர் லாரிகள் மற்றும் 2 டிராக்டர்கள் என நவீன மாநகராட்சி வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு, டன் கணக்கிலான குப்பைகள் அள்ளி அப்புறப்படுத்தப்பட்டன.

இந்தத் தூய்மைப் பணியில் வக்பு வாரியக் கல்லூரி மாணவ, மாணவிகள், பேராசிரியர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள், தன்னார்வலர்கள் பெருந்திரளாக, மிகுந்த ஆர்வத்துடன் கலந்துகொண்டு வளாகத்தைச் சுத்தப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர். நமது சுற்றுச்சூழலை எப்போதும் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிப்பதன் அவசியம் குறித்தும், டெங்கு மற்றும் தொற்றுநோய்ப் பரவலைத் தடுப்பது குறித்தும் பொதுமக்களுக்கும், மாணவர்களுக்கும் விரிவான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.





## 10 வது பொதுத்தேர்வில் சாதனை சிகரம் தொட்ட திசையன்விளை வி.எஸ்.ஆர். மெட்ரிக் பள்ளி! 100% தேர்ச்சியுடன் அபார சாதனை!

திசையன்விளை மே 21-

வெளியாகியுள்ள 2025 26 ஆம் ஆண்டிற்கான பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகளில், திருநெல்வேலி மாவட்டம் திசையன்விளையில் உள்ள புகழ்பெற்ற வி.எஸ்.ஆர். மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி 100% தேர்ச்சி பெற்று மாவட்ட அளவில் சாதனை படைத்துள்ளது.*நூற்றுக்கு நூறு மதிப்பெண் விபரம்:*இப்பள்ளியில் தேர்வு எழுதிய அனைத்து மாணவர்களும் தேர்ச்சி பெற்றது மட்டுமின்றி, பெரும்பாலானோர் அதிக மதிப்பெண்களைக் குவித்து பள்ளிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்:*மாணவி சஹஸ்ரா:* 500க்கு 489 மதிப்பெண்கள் பெற்று பள்ளியில் முதலிடத்தைப் பிடித்துள்ளார். இவர் கணிதம் மற்றும் அறிவியல் ஆகிய இரு பாடங்களிலும் 100க்கு 100 மதிப்பெண்கள் பெற்று அசத்தியுள்ளார்.*மாணவி சகாய அஸ்லின்* : 483 மதிப்பெண்கள் பெற்று இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளார்.*மாணவர் டென்னிஸ்* : 474 மதிப்பெண்கள் பெற்று மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளார்.மேலும், 15க்கும் மேற்பட்ட மாணவர்கள் 450 மதிப்பெண்களுக்கு மேலும், 25க்கும் மேற்பட்ட மாணவர்கள் 400 மதிப்பெண்களுக்கு மேலும் பெற்று சாதனைப் பட்டியலை நீட்டியுள்ளனர்.*விருதுகள் மற்றும் குவியும் வாழ்த்துகள்:*சாதனை படைத்த மாணவச் செல்வங்களும், அவர்களது பெற்றோர்களும் பள்ளிக்கு வருகை புரிந்தனர். அவர்களைப் பாராட்டி, பள்ளித் தாளாளர் வி.எஸ். ஆர். ஜெகதீஷ் மற்றும் இயக்குனர் சௌமியா ஜெகதீஷ் ஆகியோர் விருதுகளை வழங்கி, இனிப்புகள் ஊட்டி தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.இந்நிகழ்வில் பள்ளித் துணை முதல்வர் விஜயா தினகரன் மற்றும் ஆசிரியர், ஆசிரியைகள் கலந்துகொண்டு சாதனையாளர்களை மனமாரப் பாராட்டினர்.




■ புதுச்சேரி அமைச்சர் நமச்சிவாயம் தலைமையில் பாஜக சட்டமன்ற உறுப்பினர்கள் முதலமைச்சர் ரங்கசாமியை மரியாதை நிமித்தமாக சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.



■ மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், அலங்காநல்லூர் தேர்வுநிலை பேரூராட்சி, வார்டு எண் 10இல் சமுதாயக் கூடம் அருகில் அமைந்துள்ள நவீன சுகாதார வளாகத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது, நவீன சுகாதார வளாகத்தை எப்போதும் தூய்மையாக பராமரிக்கவும், சேதமடைந்துள்ள உபகரணங்கள் மற்றும் வசதிகளை உடனடியாக மாற்றி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு சிறப்பாக வைத்திருக்கவும் தொடர்புடைய அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தினார். அருகில் பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் மணிகண்டன், பேரூராட்சி செயல் அலுவலர் சிவக்குமார், இன்ஜினியர் மதுசூதனன், உள்பட அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



■ ஸ்ரீவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.சரவணன் அறிவுறுத்தலின்படி, சாத்தான்குளம் பேரூராட்சி 9வது வார்டு பகுதியில் குழந்தைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது. இம்முகாமிற்கான ஏற்பாடுகளைச் சாத்தான்குளம் நகர செயலாளர் ஆ.சக்திவேல் முன்னின்று ஒருங்கிணைத்தார்.



■ சிபிஎஸ்இ பள்ளிகளில் இந்திய மொழிகள் கட்டாயம் என்ற மத்திய அரசின் அறிவிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து, புதுச்சேரி பாகூர் தொகுதி திமுக சட்டமன்ற உறுப்பினர் செந்தில்குமார் இன்று மலையாளத்தில் பதவியேற்றுக்கொண்டார். முதலில் பிரெஞ்சு மொழியில் பதவியேற்க அனுமதி கோரிய நிலையில், அதற்கு அனுமதி மறுக்கப்பட்டதால் அவர் மலையாள மொழியில் தனது உறுதிமொழியை ஏற்றுக்கொண்டார்.



■ புதுச்சேரி சட்டப்பேரவை பதவியேற்பு விழாவின் போது, தமிழக வெற்றிக் கழக (தவெக) சட்டமன்ற உறுப்பினர் தனது கட்சித் தலைவர் விஜய்யின் புகைப்படத்தைக் காட்டியதால் அவையில் பரபரப்பு ஏற்பட்டது. விதிமுறைகளுக்கு மாறான இந்தச் செயலைக் கண்ட சபாநாயகர், அந்த எம்.எல்.ஏவை உடனடியாகக் கண்டித்து எச்சரித்தார்.



■ சேலம், ஆட்டையாம்பட்டி ரத்தினவேல் கவுண்டர் காடு "ஸ்ரீ வித்யா கணபதி ஆலய" மஹா கும்பாபிஷேக விழா. ஸ்ரீ பராபவ வருடம் வைகாசி மாதம் 6 ம் நாள் 10 மணிக்கு, சேலம் ஆட்டையாம்பட்டி இரத்தினவேல் கவுண்டர் காட்டில் எழுந்தருளியுள்ள ஸ்ரீவித்யா கணபதி ஆலய ஜீர்ணோத்தாரண புணருத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக பெருஞ் சாந்தி பெருவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து மஹா அபிஷேகம், தீபாராதனையும் நடைபெற்றது. பின்னர், ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு அன்னதானம் வழங்குதல் நிகழ்ச்சி நடைபெற்றது. ஸ்ரீவித்யா கணபதி ஆலய மஹா கும்பாபிஷேக விழாவினை ரத்தினவேல் கவுண்டர் காடு, ஊர் பொதுமக்கள் வெகு சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். இவ்விழாவில், ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டனர்.



■ புதுச்சேரியின் 16வது சட்டப்பேரவை இன்று கூடிய நிலையில், முதலமைச்சர் ரங்கசாமி மங்கலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக (எம்.எல்.ஏ) அதிகாரப்பூர்வமாகப் பதவியேற்றுக்கொண்டார். "கடவுள் அறிய உறுதி கூறுகிறேன்" என அவர் உறுதிமொழி ஏற்றுக்கொண்டதைத் தொடர்ந்து, அவையில் இருந்த அனைத்து உறுப்பினர்களும் அவருக்குத் தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.




SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000